குற்றவியல் நீதித்துறை நடுவர், விரைவு நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திரு.S.சதாம்உசேன், B.A., L.L.B.
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
விரைவு நீதிமன்றம், ஓமலூர்
எஸ்.டி.சி.எண் 11/2023

ம.சா. 3

2026–ம் ஆண்டு ஜனவரி மாதம் 20–ம் தேதி செவ்வாய் கிழமை மனுதாரர் தரப்பு சாட்சி 03–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி.இந்துமதி என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஸ்ரீராம் | தொழில் | |
| தந்தை பெயர் | கோவிந்தராஜ் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 02.37 மணி,

Complainant Govindharaj present. Accused Venu present. Advocate Mr.P.Soundararajan present for Accused.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :**

1) நான் BE படித்துள்ளேன். என் உடன் பிறந்தவர் ஒரு தங்கை இருக்கிறார். எனது அப்பா உடன் பிறந்தவர் ஒரு சகோதரி இருக்கிறார். எனது தாத்தாவுடன் பிறந்தவர் யாரும் இல்லை. எனது தாத்தாவின் சகோதரி ரங்கம்மாள் என்பவர் கருப்பூரில் உள்ள கொல்லத்தெருவில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. எனது அம்மா சேலம் கலெக்டர் அலுவலகத்தில் ஊரக வளர்ச்சி துறையில் மாவட்ட ஒருங்கிணைப்பாளராக கடந்த 10 வருடமாக இருந்து வருகிறார். எனது அம்மா மகளிர் சுயஉதவி குழுவில் இருந்து கொண்டு ஊரில் உள்ளவர்களுக்கு கடன் பெற்று தருவார் என்றால் சரியல்ல. எனது தாயாரின் பெயர் வெண்ணிலா ஆகும். எனது தாயார் சேலம் நீதிமன்றத்தில் 4 காசோலை மோசடி வழக்குகள் தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

2) எனது பிரமாண பத்திரத்தில் 2வது பத்தியில் புகார்தாரர் பைனான்ஸ் நடத்தி வந்ததாக சொல்லியுள்ளேன் அந்த நிறுவனத்தின் பெயர் ஸ்ரீராம் பைனான்ஸ் ஆகும். மேற்படி பைனான்ஸ் நிறுவனம் அரசு அனுமதி பெற்று நடந்து வந்தது என்றால் சரி. மேற்படி அரசின் அனுமதி பெற்ற உரிமத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

விசாரணை முடிந்த நேரம் மதியம் 02.46 மணி.

Sd/.S.Sadhamhusain
Judicial Magistrate,
Fast Track Court, Omalur.